வாரியத்தில் அமைக்கப்பட்ட முறைப்படியான வழக்கு மன்றத்தில் தான் தீர்ப்புகள் வழங்கப்படும். ஆகவே இன்னும் சொல்லப் போனால், இரட்டிப்பு வேலையாக இருக்கின்றது. என்றாலும் இயன்ற அளவு ஆரம்பத்திலேயே ஒரு அடிப்படை ஆதாரம் கூட இல்லை என்றாலும் வழக்கை முடித்து விடலாம். அந்த அளவிற்குத்தான் அது பயனுள்ளதாக இருக்கும். அந்த வகையில் இப்போது ஒரு சில மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, ரீஜனல் போர்டு என்பது வேறு ரீஜனல் கமிட்டி என்பது வேறு. ரீஜனல் போர்டு கைவிடப் பட்டதாக அன்மச்சர் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். ஆனால் திரு. மியாகான் சொன்னது போல, 35,000 வழக்குகள் இருந்தாலும், இப் போதே அந்த போர்டுகள் ஆங்காங்கே விசாரணை செய்கின்றன. எனவே போர்டிலே அதிகமான வழக்குகள் இருந்தால், இப்போது பின்பற்றப்படும் முறையைப் பின்பற்றி, அந்தந்த ஸ்லத்திற்கே சென்று வழக்குகளைப் பைசல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியவாறு, இப்போது கடைபிடிக்கப்படுகின்ற வழி முறைகள் நிச்சயமாகத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். இப்போது போர்டே ஆங்காங்கே உள்ள பகுதிகளுக்குச் சென்று தேவைப்படுகின்ற இடத்தில் தேவைப்படுகின்ற விசாரணையை மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதம் 24—3—1984-க்குப் பதிலாக 27—3—1984 அன்று எடுத்துக் கொள்ளப்படும். 24—3—1984 அன்று மேலவைக் கூட்டம் இல்லை. மருத்துவமும், மக்கள் நல்வாழ்வு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதத்திற்கான நாள் பின்னர் அறிவிக்கப்படும்.